
# பங்காளர்களின் உரிமைகளை அறிந்து கொள்ளுதல்



Start Your Learning Journey with e-thaksalawa

The National e-learning Portal for The General Education




## பங்காளர் மூலதனக்கணக்கு

1. பங்காளரால் ஈடுபடுத்தப்பட்ட மூலதன மீதிகளை பதிவு செய்யும் கணக்கு பங்காளர் மூலதனக் கணக்கு ஆகும்.

2. இதன் மூலம் பங்காளரது ஆரம்ப, இறுதி மூலதன மீதிகளை அறிந்து கொள்ள முடியும்.

3. இதில் பங்காளரால் ஈடுபடுத்திய மூலதன மீதிகளும், நன்மதிப்பு சீராக்கங்களும் பதிவிடப்படும்.

4. இதில் நிலையான உரிமை பதிவிடப்படும்.

தொகுப்பு திரு சி.திருக்குமரன், ஆசிரியர் கணக்கீடு, (யா/வட்டுக்கோட்டை இந்துக்கல்லூரி)
கணினிவடிவமைப்பு திரு கோ.கேதாரன், த.தொ.தொ. ஆசிரியர் (வ/தரணிக்குளம் கணேஸ் வித்தியாலயம்)

Copyright © www.e-thaksalawa.moe.gov.lk

# பங்காளர் நடைமுறைக்கணக்கு

1. மாறும் உரிமையை பதிவு செய்யும் கணக்கு நடைமுறை கணக்கு ஆகும் அதாவது பங்காளருக்கு பங்குடைமையால் செலுத்தப்பட வேண்டிய சென்மதிகளும், பங்காளரிடம் அறவிட வேண்டிய வருமதிகளும் பதியப்படும்.

2. பங்காளருக்கு பங்குடைமையால் செலுத்த வேண்டிய சென்மதிகள் இக் கணக்கின் செலவுப்பக்கத்திலும் அறவிட வேண்டிய வருமதிகள் வரவுப் பக்கத்திலும் பதியப்படும்.

| பங்காளர் நடைமுறைக்கணக்கில் பதியப்படும் விடயங்கள் | |
|---|---|
| வரவுப்பக்கம் | செலவுப்பக்கம் |
| 1. பற்று | 1. மூலதன வட்டி |
| 2. பொருள் பற்று | 2. பங்காளர் சம்பளம் |
| 3. வரவு மீதியுள்ள நடைமுறைக் கணக்கு வட்டி | 3. செலவு மீதியுள்ள நடைமுறைக் கணக்கு வட்டி |
| 4. பங்காளர் சார்பாக பங்குடைமை செய்த செலவுகள். | 4. இலாபப் பகிர்வு |
| 5. நட்டப் பகிர்வு | 5. பங்குடைமை சார்பாக பங்காளர்கள் செய்த செலவுகள் |
| | 6. பங்காளரது கட்டிடத்தில் இயங்கும் பங்குடைமையின் கட்டிட வகை |
| | 7. பங்காளர் கடன் வட்டி |



Copyright © www.e-thaksalawa.moe.gov.lk

## பங்காளர் மூலதனக்கணக்கின் மாதிரி வடிவம்

| விபரம் | கமல் | விமல் | நிமல் | விபரம் | கமல் | விமல் | நிமல் |
|---|---|---|---|---|---|---|---|
| | | | | மீதி | **XX** | **XX** | **XX** |
| | | | | காசு | **XX** | **XX** | **XX** |
| | | | | | | | |
| | | | | | | | |
| | | | | | | | |

## பங்காளர் நடைமுறைக்கணக்கின் மாதிரி வடிவம்

| விபரம் | கமல் | விமல் | நிமல் | விபரம் | கமல் | விமல் | நிமல் |
|---|---|---|---|---|---|---|---|
| மீதி | | | **XX** | மீதி | **XX** | **XX** | |
| பற்று | **XX** | **XX** | **XX** | மூலதன வட்டி | **XX** | **XX** | **XX** |
| பொருள் பற்று | **XX** | **XX** | | சம்பளம் | **XX** | **XX** | **XX** |
| நடைமுறைக்கணக்கு வட்டி | | | **XX** | கடன் வட்டி | **XX** | **XX** | |
| பங்காளர் சார்பாக பங்குடைமை செய்த செலவுகள். | | **XX** | | நடைமுறைக் கணக்கு வட்டி | **XX** | **XX** | |
| நட்டப் பகிர்வு | **XX** | | | பங்குடைமை சார்பாக பங்காளர் செய்த செலவு | | **XX** | **XX** |

தொகுப்பு திரு சி.திருக்குமரன், ஆசிரியர் கணக்கீடு, (யா/வட்டுக்கோட்டை இந்துக்கல்லூரி)
கணினிவடிவமைப்பு திரு கோ.கேதாரன், த.தொ.தொ. ஆசிரியர் (வ/தரணிக்குளம் கணேஸ் வித்தியாலயம்)

Copyright © www.e-thaksalawa.moe.gov.lk

## பயிற்சி வினா 1

பங்குடைமை ஒன்றின் கவி,புவி,ரவி என்போர் பங்காளர்கள். 1.4.2018 இல் மூலதன மீதிகள் முறையே ரூ.250000, ரூ.200000, ரூ.150000 நடைமுறைக் கணக்கு மீதிகள் முறையே ரூ.20000(செலவு), ரூ.30000(செலவு), ரூ.10000 ( வரவு ) . 31.3.2019 இல் முடிவடைந்த நிதியாண்டுக்கான தேறியலாபம் ரூ.160000. பங்காளருக்கு மூலதனத்திற்கு ஆண்டுக்கு 10% வட்டிக்கு உரித்துண்டு. பங்காளர்களுக்கு செலுத்த வேண்டிய சம்பளம் முறையே ஆண்டுக்கு ரூ.24000, ரூ.18000, ரூ.12000, ஆண்டுக்கான பற்றுக்கள் முறையே ரூ.8000, ரூ.6000, ரூ.5000 ஆகும்.

பின்வரும் ஒவ்வொரு வினாவுக்கும் விடை தருக.

1. மொத்தலாபப் பங்கு யாது?
   ……………………………………………………………………………………………………..
2. இறுதியாக பகிரக்கூடிய இலாபப் பங்கு யாது?
   ……………………………………………………………………………………………………..
3. 1.4.2018 இல் மொத்த உரிமை யாது?
   ……………………………………………………………………………………………………..
4. மூலதன வட்டி, சம்பளம் காசாக எடுக்கப்படவில்லை எனக்கருதி 31.3.2019 இல் உரிமை யாது?
   ……………………………………………………………………………………………………..
5. அரையாண்டு மூலதன வட்டியும், காலாண்டு சம்பளமும் காசாக எடுக்கப்பட்டது எனக் கருதி 31.3.2019 இல் உரிமை யாது?
   ……………………………………………………………………………………………………..

## பயிற்சி வினா 2

பின்வரும் ஒவ்வொரு கொடுக்கல் வாங்கல்களும் உரிமை மீது ஏற்படுத்தும் தாக்கத்தையும், விளைவையும் குறிப்பிடுக.

| இல | கொடுக்கல் வாங்கல் | தாக்கம் | விளைவு |
|---|---|---|---|
| 1 | செலுத்த வேண்டிய மூலதன வட்டி ரூ.24000 | மாறாது | - |
| 2 | செலுத்த வேணுடிய சம்பளம் ரூ.20000 | மாறாது | - |
| 3 | செலுத்த வேண்டிய கடன் வட்டி ரூ.24000 | குறையும் | ரூ.24000 |
| 4 | பங்காளர் பற்று ரூ.5000 | குறையும் | ரூ.5000 |
| 5 | இறுதி இலாபப் பகிர்வு ரூ.15000 | மாறாது | - |
| 6 | செலத்திய மூலதன வடடி ரூ.12000 | குறையும் | ரூ.12000 |
| 7 | செலுத்திய சம்பளம் ரூ.10000 | குறையும் | ரூ.10000 |
| 8 | பங்காளர் வழங்கிய கடன் ரூ.50000 | மாறாது | - |
| 9 | பங்காளர் சேரலின் போது மூலதனக் கணக்கினூடாக நன்மதிப்பு சீராக்கம் ரூ.50000 | மாறாது | - |
| 10 | விலகும் பங்காளனது உரிமை கடன் கணக்கிற்கு மாற்றம் ரூ.120000 | குறையும் | ரூ.150000 |

தொகுப்பு திரு சி.திருக்குமரன், ஆசிரியர் கணக்கீடு, (யா/வட்டுக்கோட்டை இந்துக்கல்லூரி)

கணினிவடிவமைப்பு திரு கோ.கேதாரன், த.தொ.தொ. ஆசிரியர் (வ/தரணிக்குளம் கணேஸ் வித்தியாலயம்)

Copyright © www.e-thaksalawa.moe.gov.lk